2017 ஜூன் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

வீட்டுமனைப் பட்டா

***6103—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, 58-வது வட்டம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், உப்பிலிபாளையம் கிராமம், 58-வது வட்டம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வரும் புலமான க.ச. எண் 365 காலையானது தனிநபருக்குப் பாத்தியப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் உரிய அனுமதி பெற்று, மேற்கண்ட காலையில் வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சி, 58-வது வட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலிக்கோணாம்பாளையம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கடந்த 40 ஆண்டு காலமாக*

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வருகின்றார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தனது பதிலில், "மாநகராட்சியிடம் உரிய அனுமதி பெற்று, மேற்கண்ட காலையில் வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், திரு. இராமச்சந்திரன் என்பவரால், 1978 ஆம் ஆண்டு, க.ச.எண் 365 என்னும் பிரிவில், அவருக்குச் சொந்தமான 4.92 ஏக்கர் நிலத்திலிருந்து 1.5 ஏக்கர் நிலமானது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அன்றைய சிங்காநல்லூர் நகராட்சி வசம் தானமாக வழங்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தை மனிதநேயத்தோடு தானமாக வழங்கிய திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு இந்த அவையின் மூலமாக நான் நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாநகராட்சியிடம் உரிய அனுமதி பெற்று, அந்த இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்பே, அதாவது 1978 ஆம் ஆண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, குறிப்பாக அருந்ததியின சமுதாய மக்களுக்காக அந்தப் பெரியவர் வழங்கிய இடம் இன்னும் உரிய முறையில் அந்த மக்களுக்குச் சென்றடையவில்லை. ஆகவே, அந்த மக்களுக்கு உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது உண்மைதான். திரு. இராமச்சந்திரன் என்பவரால், 1978-1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு, மேற்பட்ட புலத்தின் மொத்தப் பரப்பளவான 4.92 ஏக்கரில் 1.50 ஏக்கர் நிலம் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலிலே ஒரு சின்ன மாற்றம். அது என்னவெனில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "திரு. இராமச்சந்திரன் என்பவர் அந்த இடத்தை ஆதி திராவிட மக்களுக்காக வழங்கியிருக்கிறார்கள்" என்று கூறினார்கள். ஆனால், அந்த இடம் மாநகராட்சிக்குத்*

தானமாக வழங்கப்பட்டு, மாநகராட்சியின் பெயரிலே இருக்கின்ற காரணத்தால், மாநகராட்சியின் அனுமதியைப் பெற்ற பின்னர்தான் அவர்களுக்குப் பட்டா வழங்க முடியும். அந்த இடம் வருவாய்த் துறையின்கீழ் வருகின்ற நிலமாக இருந்தால், வருவாய்த் துறை உடனடியாக முடிவெடுக்க முடியும். அந்த இடம் மாநகராட்சி பெயரில் தானமாக வழங்கப்பட்டு, உப்பிலியாபுரம் கிராமம், Ward No. *14*, Block-12, T.S.L.R. No. *9*, Old S.F. No. *365* என்ற பகுதியிலே, கோயம்புத்தூர் மாநகராட்சி பெயரில் தாக்கலாகியுள்ளது. எனவே, மாநகராட்சியின் அனுமதியைப் பெற்று, பட்டா வழங்க வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மக்கள் நலன் சார்ந்து, குறிப்பாக ஆதி திராவிட மக்கள் நலன் சார்ந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்கள். எனவே, மாநகராட்சியிடம் உரிய அனுமதியைப் பெற்று பட்டா வழங்கும் பணி விரைவாக முடிவடைய நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

முற்பகல் 11-10

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சி, 58-வது வட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட, சித்தாபுதூர், தனலெட்சுமிநகர், மட்டசாலை பகுதிகளில் கடந்த 35 ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட, அருந்ததியின வகுப்பைச் சார்ந்த சுமார் 400 குடும்பத்தினர் வசித்து வருகின்றார்கள். அங்கு வசித்து வரக்கூடிய மக்கள் அத்தனை பேரும் கூலி வேலைக்குச் செல்லக்கூடிய சாதாரண மக்கள். அந்த மக்களுக்கு கடந்த 40 ஆண்டு காலமாக அவர்கள் குடியிருக்கக்கூடிய இடத்திற்குப் பட்டா வழங்கப்படாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றார்கள். ஆகவே, நான் சொன்ன அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, நீண்ட நெடுங்காலமாக வீட்டுமனைப் பட்டா கேட்டு பல்வேறு கோரிக்கைகளை எடுத்துவைத்து வருகின்ற அந்த மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சமுதாயத்திலே நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு தகுதியான நிலம் இருக்கிறதோ, அங்கெல்லாம் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகளை ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்குச் சேவையாற்றி வருகிறது. வீட்டுமனை ஒப்படை என்பது வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன்கீழே வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதி வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன் வரையறைக்குட்பட்டு வருமேயானால், அதை உடனடியாக ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில், வெங்கடாபுரம், கீரப்பாக்கம், ஊரப்பாக்கம், ஆப்பூர், பொத்தேரி ஆகிய கிராமங்களில் நீண்ட காலமாக வசித்துவரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு விரைவில் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், செங்கல்பட்டு தாலுகா, ரெட்டிபாளையம் கிராமத்தில் 2008 ஆம் ஆண்டு அரசு மூலம் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வருவாய்த் துறைப் பதிவேட்டில் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளன. அவற்றை பதிவேற்றம் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதி வருவாய் நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வருமேயானால், நிச்சயமாக அதை ஆய்வு செய்து அவர்களுக்கு பட்டா வழங்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்திலேகூட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கடந்த 6 ஆண்டுகளிலே 66,151 பேருக்குப் பட்டா வழங்கியிருக்கிறது. அதேபோல, 2008 ஆம் ஆண்டு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட அவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக உரிய கணக்கீடுகள் செய்யப்படவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே முன்வைத்திருக்கிறார்கள்.

அதையும் ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு தகவலாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலேதான் வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாத வகையிலே, ஒவ்வோர் ஆண்டும் இலவச வீட்டுமனைப் பட்டா ஏழையெளியோருக்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த ஆண்டுகூட மூன்றரை இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே கடந்த 6 ஆண்டுகளிலே 14 இலட்சம் இலக்கை வைத்து 16 இலட்சம் ஏழையெளிய மக்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைக்கின்ற வகையிலே வீட்டுமனைப் பட்டா வழங்கிய ஒரே அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை **V.N.** ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, என்றும் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் அரசை எல்லோரும் போற்றுகின்ற வகையிலும், பாராட்டுகின்ற வகையிலும் வழி நடத்திச் செல்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

விருகம்பாக்கம் தொகுதி 128-வது வட்டத்தில், பச்சையம்மன் கோயில் தெருவில் சுமார் 200 குடும்பங்கள் வசிக்கின்றன. கிட்டத்தட்ட 50 ஆண்டுகாலமாக வசித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. பட்டா வழங்கினால் சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்று வீடு கட்டிக்கொள்வதற்கும், வங்கியில் கடன் பெற்று வீடு கட்டிக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய அரசு மூன்று வகையான பட்டாக்களை வழங்கி வருகிறது. Under Regular Scheme, Under Regularisation of Encroachment Scheme, Under Natham and Town Settlement Scheme என்று மூன்று வகைகளிலே வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வருகிறது. தடையாணைகளை சில பகுதிகளிலே மக்கள் நலன் கருதி அரசு விதித்திருக்கிறது. அதேபோல, வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு தகுதியுள்ள இடங்களை, தகுதியுள்ள

நபர்களுக்கு வழங்கி வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதி வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வருமேயானால், நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

ஈட்டுறுதி மருத்துவமனை

***5259— திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாநகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாநகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு, இந்து சமய அறநிலையத் துறைக்குட்பட்ட அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமான 7.46 ஏக்கர் நிலம், ரூ.11 கோடியே 91 இலட்சம் செலவில், இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து 18—10—2012 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்மூலம் தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தால் வாங்கப்பட்டு, அந்நிலத்தினைச் சுற்றி ரூ.72 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச் சுவர் கட்டிய பிறகு, இதனை எதிர்த்து அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலின் பரம்பரை பூசாரி திரு. ஆறுமுகம் மற்றும் 15 பேர், மேற்படி நிலம் தங்களுக்குச் சொந்தம் என உரிமை கோரியதால் திருப்பூர் நீதிமன்றத்தில் ஓ.எஸ். நெ. 90/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.